## தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களின் அடிப்படையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2 (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 479,603 சதுர அடியில் மொத்தம் 34 கட்டிடங்கள் மற்றும் 7 மாவட்டங்களில் உள்ள 14 காணிகள் திணைக்களத்தின் சொத்துக்களாக மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் காணியின் மதிப்பை முறையாக கணக்கிட வேண்டும். |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்கு சொந்தமான வருமான தலைப்பொன்று இல்லாதிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் | அவதானிப்புக்களுடன் இணக்கப்பாடு காணப்பட்டிருந்தது. | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு வழிகாட்டி |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணங்கள், மிகை அறிவீடுகள், தண்டப்பணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரமாக ரூபா 28,238,944 காண்பிக்கப்பட்டிருந்தது. | | இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாறு கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 105,587,156 ஆன போதிலும் ரூபா 99,220,347 ஆக ரூபா 6,366,809 இனால் குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானமல்லாத பெறுவனவுகள் திணைக்களத்தின் மாதாந்த கணக்கின் பொழிப்பின் பிரகாரம் ரூபா 99,220,347 ஆகும். அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளாக அந்த பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பெறுமதி சேர் வரி பெறுவனவுகள் ரூபா 7,888,722 தொகையானது ஏனைய பெறுவனவுகளாகவும் பெறுமதி சேர் வரி கொடுப்பனவு ரூபா 2,763,505 தொகை ஏனைய செலவினங்களாகவும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அதனை திருத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரிய வழிகாட்டியின் இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாறு கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் புத்தகங்களில் காணப்பட்ட ரூபா 378,805 ஆன நன்கொடைகள் மற்றும் மாற்றல்களின் தொகையானது காசுப் பாய்ச்சல் கூற்றில் நன்கொடைகள் மற்றும் மாற்றல்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இது காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று அல்ல என்பதுடன் மாற்றல் பத்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் என்பதால் காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 3,999,919 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 4,642,575 ஆக ரூபா 642,656 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதியானது முற்பணக் கொடுப்பனவு பெறுமதியுடன் சேர்க்கப்பட்டு காசுப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 4,642,575 இங்கு காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 23,169,438 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 12,139,267 ஆக ரூபா 11,030,171 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் காசாக மேற்கொள்ளப்பட்ட வைப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 12,139,267 ஆக காணப்படுவதுடன் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகளை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வைப்பு கொடுப்பனவுகள் ரூபா 18,626,109 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 8,555,491 ஆக ரூபா 10,070,618 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் காசுப் புத்தகத்தின் பிரகாரம் காசாக மேற்கொள்ளப்பட்ட வைப்பு கொடுப்பனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 8,555,491 ஆக காண்பிக்கப் பட்டுள்ளது. | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் காசிலான தேறிய மாற்றம் பூச்சியமாக வேண்டிய போதிலும் ரூபா 7,167,555 ஆன செலவு மீதியொன்று 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இறுதி காசு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக காசிலான தேறிய மாற்றங்கள் ரூபா 7,167,552 ஆன பற்றாக்குறை காண்பிக்கப்பட்டதுடன் அது பூச்சியமாக திருத்தப்பட வேண்டும். | நிதிக் கூற்றுக்களினை சரியாக தயாரிப்பதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

### 1.6.2 ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 88,747,500 ஆக காண்பிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் நிதியமல்லாத சொத்துக்கள் கணக்கில் (ACA-06 மாதிரி) காண்பிக்கப்பட்டிராததுடன் நிதி நிலைமைக் கூற்றில் வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கங்களின் கீழும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 88,747,500 ஆன செலவினத் தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளமையால் அது வாடகை மற்றும் முற்பணக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே இது தற்போது நடைமுறை வேலையொன்றின் காரணமாக (ACA-06) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பிரகாரமான வழிகாட்டி எண் 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுமதி முறையே ரூபா 2,439,254 மற்றும் ரூபா 1,862,495 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ACA 6 மாதிரியில் அவை முறையே ரூபா 3,725,967 மற்றும் ரூபா 575,782 ஆக காண்பிக்கப்பட்டிருந்தன. | குறியீட்டு இலக்கம் 6112201 மற்றும் 6112205 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிகள் மாற்றப்பட்டு பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட தவறுகள் முன்கொண்டு வரப்பட்டமையால் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளில் சரியான பெறுமதிகளை காண்பிப்பதற்கு பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். |

### 1.6.3 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய புத்தகங்களை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கான பதிவே டொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 06 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 521,500,000 கூட்டுப் பெறுமதியான தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 219,559,724 பயன்படுத்தப்பட்டு ரூபா 301,940,276 ஆன சேமிப்பொன்று காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டின் 20 முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. | நாட்டில் நிலவிய தொற்று நிலைமையின் கீழ் நாடு முழுமையாக மூடப்பட்டமையால் தம்புள்ளை நகரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வெப்ப கட்டுப்பாட்டு களஞ்சிய தொகுதிக்காக இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட உபகரணங்கள், கட்டிடப் பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்ய முடியாமையால் தம்புள்ளை குளிரூட்டல் அறை செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட செலவினத் தலைப்பு இலக்கம் 2001-11, 2001-13 மற்றும் 2001-17 ஆகியவற்றின் கீழ் ரூபா 261,622,123 தொகை எஞ்சியிருந்தது. அவ்வாறே 300-1-1-2001 இற்காக ஒதுக்கப்பட்ட | ஏற்பாடு செய்யப்படும் நிதி ஏற்பாடு களிலிருந்து இயலுமான அளவில் பயன்பாட்டினை பெற்றுக் கொண்டு உரிய பணியை நிறைவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிதியேற்பாடுகளில் அம்பாந்தோட்டை, கெகிராவ, ஒறுகொடவத்த செயற்திட்டங்களும் திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்த முடியாத காரணத்தால் அந்த செலவினத் தலைப்பினதும் நிதியேற்பாடுகளும் எஞ்சியிருந்தன. | |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான சான்றுகள் காணப்படாத போதிலும் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு (V) இன் கீழ் நி.பி.215(3) (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் பிரகாரம் ரூபா 396,333 தொகை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (V) இன் கீழ் நி.பி.215 (3) (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் பிரகாரம் ரூபா 396,333 வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணகாய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் | | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 | 1,452,350<br>202,319,590 | 05 வருடங்களை விட குறைவான மற்றும் 10 வருடத்திற்கு மேற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு | அதனை எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அறவிடப்பட முடியாத நட்டங்கள் தொடர்பில் உரிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அல்லது உரிய முறையில் விசாரணைகளை நடாத்தி அந்த அறிக்கைகளின் அடிப்படையில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571 | 68,779,134 | 02 வருடங்களை விஞ்சிய வைப்பு மீதிகள் தொடர்பில் தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டு எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு உரிய வழிகாட்டில் இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தி | 664,922 | மீளாய்வாண்டினுள் செலுத்த வேண்டிய செலவினங்களாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படாத செலுத்த வேண்டிய செலவினங்கள் 2021 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தினுள் தீர்க்கப்பட்டிருந்தன. | இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது கொடுப்பனவுகளுக்காக உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பித்திராக காரணத்தினால் இறுதி கணக்கு அறிக்கைகளில் அதனை உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் VIII இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வங்கி கணக்குகள் தொடர்பிலான அறிக்கையில் அரச வங்கி | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு VIII இன் கீழ் கீழான கணக்கு இலக்கம் 7042667 இன் மீதியாக ரூபா 95,955,972 | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கொன்றில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வங்கி கூற்றின் பிரகாரமான மீதி ரூபா 95,955,972 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 93,955,972 ஆனமையால் ரூபா 2,000,000 ஆன வேறுபாடொன்றை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | காண்பிக்கப்பட்டுள்ளமை தவறுதலாக இடம்பெற்றுள்ளதுடன் அதன் சரியான மீதி ரூபா 93,955,972 என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பிலான இணக்கக்கூற்று**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பணிவறிதாக்கப்பட்ட 07 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 365,547 தொகை காணப்பட்டதுடன் அவற்றுள் 06 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களை கடந்த ரூபா 202,627 ஆன கடன் மீதியும் காணப்பட்டது. சேவையை கைவிட்டுச் சென்ற 09 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 826,656 காணப்பட்டதுடன் அவற்றுள் 08 உத்தியோகத்தர்களின் 05 வருடங்களை கடந்த ரூபா 643,076 ஆன கடன் மீதியொன்றும் நிலவியது. | 2020 ஆம் ஆண்டின் போது பணி வறிதாக்கப்பட்ட சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து கடனை அறவிடுதல் தொடர்பில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 10 வருடங்களை விஞ்சியுள்ள ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு ஓய்வூதிய உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு எவரும் முன்வந்திராததுடன் அவர்களின் தனிப்பட்ட கோவைகளை தேடிக் கண்டறிய முடியாமையுள்ளதால் எதுவித தகவலையும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதால் அவற்றை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 05 வருடங்களை கடந்த மரணமடைந்த உத்தியோகத்தர் | மரணமடைந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எவரும் முன்வந்திருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 154,130 ஆன கடன் மீதியும், ஓய்வு பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 174,157 ஆன கடன் மீதியொன்றும் நிலவியது. | கடனுக்கு பிணை வைக்கப்பட்டுள்ளது காப்பீட்டு நிதியம் ஆகும். இது தொடர்பில் அரசு கணக்குகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது, ஓய்வுபெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரின் கடன் தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவரின் கடன் மீதியை பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர் கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | எடுக்க வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்பு ஆகியவற்றிற்கு இடையே முன்னைய ஆண்டுகளிலிருந்து முன் கொண்டு வரப்படும் ரூபா 332,250 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாடு 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த வருடங்களிலிருந்து முன்கொண்டு வரப்படும் இந்த வேறுபாட்டினை இனங்காண்பதற்கு முயற்சி எடுத்த போதிலும் இதுவரையிலும் அதனை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. | வேறுபாட்டினை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உணவு ஆணையாளர் திணைக்களம் ''பாதுகாப்பான தொடர்ச்சியான, போசனைமிக்க தானிய உணவு அனைத்து வீட்டிற்கும்'' எனும் தூரநோக்கின் அடிப்படையில் செயற்படுவதுடன் அதன் கீழ்,<br><br>(அ) தெற்காசிய வலய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் (SAARC) கொழும்பு சாசனம் மற்றும் 16 ஆவது மாநாட்டின் பிரகாரம் 8000 மெற்றிக் தொன் விசேட அரிசி இருப்பினை பேணுதல்,<br><br>(ஆ) 2008 ஏப்ரல் 27 ஆந் திகதி அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் நாடு முழுவதும் காணப்படும் திணைக்களத்தின் களஞ்சியங்களில் 100,000 மெற்றிக்தொன் அளவிலான பாதுகாப்பு அரிசி இருப்பினை பேணுதல்,<br><br>ஆகியவை பிரதான பணிகளாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டினுள் திணைக்களம் எந்த அரிசி இருப்பினையும் பேணியிருக்கவில்லை. அதன் பிரகாரம் திணைக்களம் அதன் பிரதான நோக்கத்தினை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பாதுகாப்பு அரிசி இருப்பொன்றினை பேணுவதற்காக ரூபா 200 மில்லியன் சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு கடன் சலுகைகளை வழங்கி சந்தையில் அரிசி இருப்பினை ஏற்படுத்துவதற்காக ரூபா 300 மில்லியனையும் வழங்குமாறு கோரி அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2020 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அரிசி இருப்பினை பேணி மேற்கூறிய அத்தியாவசிய அடிப்படை பணிகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிறுவனத்தின் தூர நோக்கு மற்றும் பிரதான நோக்கம் ஆகியவற்றை நிறைவேற்று வதற்கு உரிய பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |

**3.2 காலம் தாமதித்து ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தம்புள்ளை வெப்ப கட்டுப்பாட்டு களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக 2019 யூன் 26 ஆந் திகதி ரூபா 524,244,587 பெறுமதிக்கு 06 மாதங்களுக்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் 26 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்படவில்லலை என்பதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 283,245,417 ஆன தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | திட்டமிட்டவாறு செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றிற்காக ரூபா 153 மில்லியன் மற்றும் தம்புள்ளை வெப்ப கட்டுப்பாட்டு களஞ்சிய தொகுதியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 356 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த | திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தினை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பாதீட்டுடன் இணங்கியதாக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் ரூபா 167 மில்லியனுக்கான பெறுகைகள் திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) 2020 ஆம் ஆண்டிற்கான பதவியணி பயிற்சிக்காக ரூபா 250,000 ஆன நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் பெறுகைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் பதவியணி பயிற்சிகளுக்காக ரூபா 390,000 ஆன பெறுகைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தினை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பாதீட்டுடன் இணங்கியதாக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள் இறுதியாக 2019 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்ந்தும் மதிப்பீடு செய்யப்பட்டிராத காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்டது. | மதிப்பிடப்படாத சொத்துக்களை எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யும் நடைமுறையை துரிதப்படுத்தி நிறைவு செய்வதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2009 ஆம் ஆண்டு முதல் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கேகாலை பரகம்பன களஞ்சியத் தொகுதி தனியார் கம்பனியொன்றிற்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. 2014 யூலை 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 541,017 ஆக காணப்பட்டதுடன் அதனை அறவிடுவதற்காக 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் நிலுவை வாடகையினை அறவிட முடியாதிருந்தது. 01, 02, 03 ஆம் இலக்கமுடைய களஞ்சியங்கள் ரூபா 110,000 ஆன மாதாந்த வாடகைக்கு 2020 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக தனியார் கம்பனியொன்றுக்கு வழங்குவதற்கு 2020 யூலை 29 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ஆகஸ்ட் 24 ஆந் திகதி ரூபா 690,000 ஆன வைப்பு தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதிய கடிதத்தில் இந்தக் களஞ்சியத்தை | கேகாலை பறகம்பன களஞ்சியத்திற்காக விஜித்த குழும வியாபாரத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 541,017 ஆன தொகையினை அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இலக்கம் 01226/19 இன் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கு 2020/08/24 ஆந் திகதி இறுதியாக அழைக்கப்பட்டுள்ளதுடன் அந்த வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றவாறும் உள்ளன.<br><br>வர்த்தக அமைச்சரின் அறிவுரையின் அடிப்படையில் அந்த களஞ்சியம் திணைக்களத்தின் பொறுப்பில் வைத்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கி உணவு ஆணையாளரினால் 2020.10.13 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

திணைக்களத்திற்கு மீள வழங்குமாறும் ஆரம்ப வைப்புத் தொகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் அவதானிக்கப்படாததுடன் தற்போது இந்த திணைக்களம் மீள திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2020/15 மற்றும் 2020 ஏப்ரல் 14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு செயற்படு மூலதனத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 300 மில்லியன் ஆன போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 293 மில்லியன் மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அவற்றுள் 81 சதவீதம் 2020 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலப் பகுதியிலேயே கிடைத்திருந்தது. அதுவரையிலும் 2020 சிறு போகத்தின் நெல் அறுவடைப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களுக்கு ரூபா 292.7 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் 105.7 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியான திசெம்பர் 30 மற்றும் 31 ஆந் திகதிகளிலேயே வழங்கப்பட்டிருந்தது. ரூபா 87.2 மில்லியன் தொகை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்க பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் பட்டியலில் உள்ளடக்கப்படாத 04 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட தொகையினை விட வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு ரூபா 91 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. | அந்த சங்கங்களுக்கு கடன் வழங்கும் போது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்ட கண்காணிப்பு குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>2018/2019 நிகழ்ச்சித் திட்டத்திற்காக கடன் தொகையினை வழங்க தீர்மானிக்கப்படுவது சங்கங்களின் மூலம் வங்கிக்காக செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் பெறுமதி மற்றும் அங்கத்துவ அரிசி ஆலைகளின் அரிசி உற்பத்தி இயலளவு கருத்திற் கொண்டே என்பதால் கூட்டுறவு ஆணையாளர் பரிந்துரை செய்யப்பட்ட கடன் தொகையை விஞ்சி கடன் வழங்க நேர்ந்தது. அவ்வாறே 2018/2019 ஆம் ஆண்டுகளில் வழங்கிய கடன் அளவினை குறைத்தல் கொள்கைக்கு முரணானது என்பதால் அந்த அளவே 2019/2020 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்களிலும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் அடிப்படையில் நலனாளிகளுக்கு உரிய காலத்தினுள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | வடமாகாணத்தின் 14 கூட்டுறவுசங்கங்களுக்காக ரூபா 45 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதி அவற்றுள் ரூபா 20 மில்லியன் வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்ப பட்டிருந்த போதிலும் அவற்றுள் ரூபா 16 மில்லியன் கொள்வனவுகளுக்கு ஈடுபடுத்தப்படாது 2020 | ஏற்றுக் கொள்கின்றேன்.<br><br>மாகாண கூட்டுறவு ஆணையாளரின் பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் சங்கங்களுக்கு உரிய கடனை மாகாண கூட்டுறவு ஆணையாளரால் வழங்கப்படுவதுடன் அதனை கண்காணிப்பதும் அவரேயாகும். | கிடைக்கும் பணம் உரிய முறையில் பயன்படுத்தப் படுகின்றதா என்பது தொடர்பில் கண்காணிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 12 மற்றும் 14 ஆந் திகதிகளில் மீண்டும் மீளத் திருப்பியனுப்பப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 4 மில்லியன் 03 சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ஒரு சங்கம் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் காணப்படவில்லை. | | |
| (iii) | மாகாண கூட்டுறவு ஆணையாளர்களுக்கு கிடைத்த ரூபா 292.7 மில்லியன் தொகையில் கூட்டுறவு சங்கங்களுக்காக 2021 சனவரி 12 ஆந் திகதி வரையிலும் ரூபா 267.7 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் நெல்லினை கொள்வனவு செய்வதற்காக அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு ரூபா 144.1 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களுக்கு கிடைத்த தொகையில் 52 சதவீதம் கூட்டுறவு சங்கங்களினுள் தக்க வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | கிடைக்கும் நிதியினை செயற்திறனான முறையில் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | வடமேல் மாகாணத்தின் 3 கூட்டுறவு சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 118 மில்லியன் தொகையில் ரூபா 34.9 மில்லியன் அல்லது 29 சதவீதம் மாத்திரமே அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் வ/ப புத்தளம் தி.ச.நி.ச சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 70 மில்லியன் தொகை 2021 சனவரி 12 ஆந் திகதி | ஏற்றுக் கொள்கின்றேன். | உரிய காலப் பகுதியினுள் அனைத்து பணத்தினையும் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் எந்த அரிசி ஆலை உரிமையாளருக்கும் வழங்கப்படாது பயன்படுத்தப்படாது தக்க வைக்கப்பட்டிருந்தது. | | |
| (v) | விஞ்ஞானபத்தில் முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கும் போது கடன் வசதிகளை பெற்றிராத மற்றும் வங்கிகளுக்கு கடன் தவணைகளை செலுத்துவதனை புறக்கணிக்காத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு மாத்திரம் உத்தேசிக்கப்பட்ட செயற்படு மூலதன வசதிகளை வழங்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டின் போது கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 180.7 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்த 5 மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 214 மில்லியனான செயற்படு மூலதன வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. | கடன் தொகை உரிய முறையில் செலுத்தி தீர்க்கப்பட்டதற்கு உரிய மாவட்ட செயலாளரிடமிருந்து சான்றுப்படுத்திய பின்னர் இந்த 05 கூட்டுறவு சங்கங்களுக்கு பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (vi) | விஞ்ஞாபனத்திற்காக 2020 மே 07 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு 2020 சிறுபோகத்தின் நெல் அறுவடை செய்யப்பட்டதன் | இதன் மூலம் பணம் வழங்கப்படுவது நெல்லினை கொள்வனவு செய்து உற்பத்தி செய்வதற்கேயாகும். அதனால் சிறுபோகத்தினுள் கொள்வனவு செய்த நெல்லினை அரிசியாக்குவதற்கு | உரிய காலப் பகுதியினுள் பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னரே பணம் வழங்கப்பட்டிருந்தது. | சிறுபோகத்தின் அறுவடை கிடைத்த பின்னர் இந்த பணத்தை பயன்படுத்த இயலும். | |
| (vii) | விஞ்ஞாபனத்தின் (4) பந்தியின் (2) இன் பிரகாரம் நடைமுறையை கண்காணிப்பதற்கு குழுவிற்கு நிதி அமைச்சின், நெல் சந்தைப்படுத்தல் சபை ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் எனுமாறு உள்ளடக்கியிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2020 யூலை 29 ஆந் திகதியி NITC/FD/பொது-11 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கண்காணிப்பு குழுவின் நியமனம் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | அந்தக் கடிதம் வர்த்தக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டதாகும். | விஞ்ஞாபனத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (viii) | 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் மாதமொன்றுக்கு மூன்று அல்லது நன்கு முறை சந்தித்து நெல் கொள்முதல் முன்னேற்றம் குறித்து விவாதிக்க வேண்டும் என முடிவு செய்தாலும், 2020 திசெம்பர் 17 ஆந் திகதிய FC/6.1/2/மு.பு/2020 ஆம் இலக்கமிட்ட பதில் கடிதத்தின் படி அத்திகதி வரையிலும் குழு மூன்று முறை மட்டுமே கூடியிருந்தது. | 2020 ஆண்டு முழுவதும் நீடித்த அவசர கோவிட் 19 சூழ்நிலையால் மேற்பார்வைக் குழு மூன்று முறை மட்டுமே கூடியது. | கூட்ட முடிவுகளின்படி மேற்பார்வைக் குழு செயல்பட வேண்டும். |

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் 2 ஆம் பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பணிகளை மேற்கொள்ள உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க வேண்டியதுடன், உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை எனின் அதிகாரச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் நிமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று காணப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். |

5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 227 ஆகவும், உண்மையான பதவியணி 86 ஆகவும் | இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் | சேவை தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| காணப்பட்டமையால் வெற்றிடங்கள் நிலவின. | 141 | செயலாளர் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒரு அதிகாரியின் ஓய்வு, இறப்பு மற்றும் அடுத்தடுத்த நியமனம் ஆகியவற்றின் அடிப்படையில் இடமாற்றங்கள் காரணமாகவும் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. கள உத்தியோகத்தர்கள் மற்றும் காவலர் பதவிகள் தற்போது பதவியில் இருப்பவருக்கு பிரத்தியேகமாகும் வகையில் தனியாரால் நடத்தப்பட்டு வருவதுடன், வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |